# 1

# படைப்புகள் சிலவற்றை அறிவோம்











அல்லாஹ் எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளான். அவை அற்புதமானவை; பல்வகை சார்ந்தவை. அவற்றுள் கண்களுக்குப் புலப்படுவனவும் புலப்படாதனவும் உண்டு.

அல்லாஹ்வின் படைப்புகளுள் மனிதன் விசேடமானவன். மலக்குகள், ஜின்கள் என்ற கண்களுக்குப் புலப்படாத வேறு படைப்புகளும் உண்டு. இம்மூன்று படைப்புகளுக்குமிடையிலான தொடர்புகளை முதலில் நோக்குவோம்.

இவை வித்தியாசமான மூலங்களால் படைக்கப்பட்டுள்ளன.

மலக்குகள் ஒளியினாலும்

ஜின்கள் நெருப்பினாலும்

மனிதர்கள் மண்ணினாலும் படைக்கப்பட்டுள்ளனர்.

ஒளி, நெருப்பு, மண் என்பன அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட வித்தியாசமான மூலங்களாகும். இவற்றின் மூலம், உயிரும் இயக்கமும் கொண்ட மூன்று படைப்புத் தொகுதியினரை அல்லாஹ் சிருஷ்டித்துள்ளான். வெவ்வேறு வகையிலான இப்படைப்புகள் எவ்வளவு அற்புதமானவை!

இம்மூன்று படைப்புகளதும் மூலங்கள் வேறுபட்டிருப்பது போல இயல்புகளும் வேறுபட்டிருக்கின்றன. மனிதனுக்கு









சுயமான உருவம் உண்டு. அதனை மாற்ற முடியாது. மலக்குகள், ஜின்கள் சுயரூபத்தை மாற்றிக் கொள்ள முடியும். ஆனால் மலக்குகள் நாய், பன்றியின் உருவங்களில் மாற மாட்டார்கள்.

அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகளான மலக்குகளுக்குப் பிரமாண்டமான இறக்கைகள் காணப்படுகின்றன. அவை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன.

''அல்லாஹ் இரண்டிரண்டு மும்மூன்று நன்னான்கு இறக்கைகளுடைய மலக்குகளைத் தூதுவர்களாக ஆக்கினான்'' (35:1) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு, வானத்துக்கும் பூமிக்கும் இடைப்பட்ட பகுதியை நிரப்பும் அளவு பிரமாண்டமான 600 இறக்கைகள் இருப்பதாக (புஹாரி) ஹதீஸ் குறிப்பிடுகின்றது. அல்லாஹ் மலக்குகளுக்கு வெவ்வேறான பணிகளை வழங்கியுள்ளான். அவற்றை அவர்கள் தவறாது நிறைவேற்றுவர். இதனை ''அவர்களுக்கு ஏவியதில் (ஒரு சிறிதும்) மாறு செய்ய மாட்டார்கள் அவர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளைகளைச் செய்து வருவார்கள்'' (66:6) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

மலக்குகளின் இயல்புகள் மனித, ஜின் இயல்புகளிலிருந்து வேறுபட்டவை. அவர்கள் உண்ணவோ, பருகவோ, உறங்கவோ, சோர்வடையவோ மாட்டார்கள். அவர்களில் ஆண்-பெண் வேறுபாடில்லை.

ஆனால் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் உண்ணல், உறங்கல், களைப்படைதல், குடும்ப வாழ்வு நடத்தல் முதலியவற்றில் ஒத்த நிலை காணப்படுகின்றது. இவ்விரு படைப்புகளுக்கும் வழிகாட்ட அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். நபி ஸ அவர்கள், தான் கொண்டு வந்த ரிஸாலத்தை மனிதர்களுக்கு மட்டுமன்றி ஜின் இனத்துக்கும் எத்தி வைத்தார்கள். ஜின்கள் அல்குர்ஆனைச் செவிமடுத்தார்கள்.

இதனை ''நபியே நீர் கூறுவீராக. நிச்சயமாக ஜின்கள் சிலர் (அல்குர்ஆனை) செவியுற்றனர். பின்னர் தங்களது இனத்தவர்களிடம், 'நாங்கள் மிக்க ஆச்சரியமான குர்ஆனை செவியுற்றோம் என்று கூறினார்கள்' என எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது'' (72:1) என்ற அல்குர்ஆன் வசனம் எடுத்துக் காட்டுகிறது.

மேலும் ஜின்களும் மனிதர்களும் அல்லாஹ்வை வணங்குவதற்காகவே படைக்கப்பட்டுள்ளனர். ''என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் ஜின்களை









யும் மனிதர்களையும் படைக்கவில்லை” (51:56) என அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

இறை கட்டளைக்கேற்ப வாழ்வதன் மூலம் மனிதர்களும் ஜின்களும் தமது வாழ்வை ‘இபாதத்’ ஆக மாற்றிக் கொள்ள முடியும். இது அவர்களின் தெரிவுச் சுதந்திரத்திற்கு விடப்பட்டுள்ளது. அவர்களில் ‘‘விரும்பியவர் விசுவாசிக்கலாம்: விரும்பியவர் நிராகரிக்கலாம்.” (18:29) மலக்குகளுக்கு இவ்வாறான தெரிவுச் சுதந்திரம் கிடையாது.

அல்லாஹ்வை நம்பி, இறைத்தூதை ஏற்று வாழ்பவர்கள் ‘முஸ்லிம்கள்’ ஆவர். இதனை நிராகரிப்பவர்கள் ‘காபிர்கள்’ ஆவர். ஜின்களுக்கு மத்தியிலும் இந்த வேறுபாடு உண்டு. ஜின்களில் வரம்புமீறியவர்களே ஷைத்தான்கள் எனப்படுகின்றனர். ஷைத்தான்களை வழிநடத்தும் தலைவனே ‘இப்லீஸ்’ ஆவான்.

மனிதர்களும் ஜின்களும் மறுமையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர். ஆனால் மலக்குகளுக்கு விசாரணையில்லை. விசாரணையின் பின்னர் மனிதர்களும் ஜின்களும் சுவர்க்கத்தையோ நரகத்தையோ அடைவர்.

அல்லாஹ்வின் படைப்புகளாக மனிதர்களும், மலக்குகளும், ஜின்களும் இருப்பது போல, கோள்கள், நட்சத்திரங்கள், விலங்குகள், தாவரங்கள், சடப்பொருட்கள் எனப் பல்வேறுபட்ட வேறு படைப்புகளும் காணப்படுகின்றன. அவையனைத்தும் அல்லாஹ்வின் அற்புதப் படைப்பாற்றலையும் இயக்க சக்தியையும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் சிலவற்றுக்கு உயிரும் இயக்கமும் உண்டு. வளர்ச்சியும் தேய்வும் உண்டு. இவை அனைத்தும் அல்லாஹ்வைத் துதி செய்த வண்ணமுள்ளன. இவற்றை மனிதர்களால் விளங்கிக்கொள்ள முடியாது. இது பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ...

வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன.... (64:1)

அல்லாஹ் எதையும் வீணுக்காகப் படைக்கவில்லை. அல்லாஹ்வின் படைப்புகளிலுள்ள அற்புதங்கள் ஒவ்வொன்றும் அவனது இருத்தலை (உள்ளமையை) வெளிப்படுத்துகின்றன; அவனது படைப்பாற்றலை வெளிக்காட்டுகின்றன. அவற்றின் செயற்பாடுகள் எமக்குப் பலவகையிலும் துணை செய்கின்றன.

அவ்வாறே பிரபஞ்சத்தில் நிகழும் அனைத்து நிகழ்வுகளும் அல்லாஹ்வின் இருப்பையும் வல்லமையையும் வெளிப்படுத்துகின்றன. மழை, காற்று, இடி, மின்னல், பூமியதிர்வு போன்ற பல்வேறு பிரபஞ்ச நிகழ்வுகளும் அவனது நாட்டப்படியே நிகழ்கின்றன.

**பயிற்சி:**

1. பின்வருவனவற்றுள் சரியானதற்கு (√) எனவும் பிழையானவற்றிற்கு (×) எனவும் அடையாளமிடுக.

   i) மலக்குகள் ஒளியினால் படைக்கப்பட்டுள்ளனர். (   )

   ii) இப்லீஸ் மலக்குகளின் இனத்தைச் சார்ந்தவன். (   )

   iii) ஷைத்தான்களுக்குத் தமது சுய உருவை மாற்றிக் கொள்ளும் ஆற்றல் உண்டு. (   )

   iv) மனிதர்களுக்குச் சுயவிருப்பத் தேர்வு இல்லை. (   )

   v) மலக்குகள் இறை கட்டளைக்கு மாறு செய்ய மாட்டார்கள். (   )